செ.வெ.எண்.157 நாள்:10.03.2018

திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றங்கரை பகுதியில் மிஷன் கிளின் தாமிரபரணி மூன்றாம் கட்ட தூய்மை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பங்கேற்றார்.

----

திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றங்கரை பகுதியில் மிஷன் கிளின் தாமிரபரணி மூன்றாம் கட்ட தூய்மை பணிகள் துவக்க நிகழ்ச்சி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள தாமிரபரணி ஆற்றங்கரை பகுதியில் இன்று (10.03.2018) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் மிஷன் கிளின் தாமிரபரணி மூன்றாம் கட்ட தூய்மை பணிகளை துவக்கி வைத்து பங்கேற்றார். தொடர்ந்து பேராச்சியம்மன் கோயில் ஆற்றங்கரை பகுதி பாளையங்கோட்டை 1 வெள்ள கோயில், வெள்ள கோயில் கல்லரை சுடுகாடு பகுதி, நாராணம்மாள்புரம் பேரூராட்சி, அருகன்குளம், அருகன்குளம் படித்துரை உள்ளிட்ட ஆற்றங்கரை பகுதியில் கல்லூரி மாணவ, மாணவிகள், மாநகராட்சி பணியாளர்கள், அரசு பணியாளர்களின் சங்க பிரதிநிதிகள் பங்கேற்ற தூய்மை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். இப்பணிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் கல்லூரி மாணவ, மாணவிகளுடன் சேர்ந்து தூய்மை பணிகளையும் மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரை பகுதியை தூய்மைப்படுத்தும் பணிகளும் பொதுமக்களுக்கு ஆற்றங்கரை பகுதியை தூய்மையாக வைத்து கொள்ள வேண்டுமென்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மிஷன் கிளின் தாமிரபரணி திட்டம் இரண்டு கட்டங்களாக ஏற்கனவே முடிக்கப்பட்டு தற்போது மூன்றாம் கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதற்கட்டமாக திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் உள்ள 10 கி.மீ தூரத்திற்கும் இரண்டாம் கட்டமாக 60 கி.மீ தூரத்திற்கும் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது பாபநாசம் முதல் சீவலப்பேரி வரை 72 கி.மீ தூரத்திற்கு 69 இடங்களில் தூய்மை பணிகள் மற்றும் ஆற்றங்கரை பகுதியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது. நேற்று (09.03.2018) 100 ஜேசிபி மற்றும் கிட்டாச்சி இயந்திரங்களை கொண்டு முள் மற்றும் புதர்களை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இன்று 72 கல்லூரிகளை சேர்ந்த 15 ஆயிரம் மாணவ, மாணவிகள், தொண்டு நிறுவனங்கள், வருவாய்த்துறை சங்கம், ஊரக வளர்ச்சித்துறை சங்கம், செஞ்சிலுவை சங்கம், ஓய்வு பெற்ற அரசு உழியர்கள் சங்கம் உள்ளிட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் சுமார் 5 ஆயிரம் நபர்கள் என 20 ஆயிரம் பேர் இப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். பொதுமக்களுக்கும் ஆற்றங்கரை பகுதியை தூய்மையாக வைத்துகொள்ள வேண்டுமென்ற விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது. திருநெல்வேலி ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் இப்பணிகளுக்கு தேவையான கருவிகள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கான தேவையான உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு

கழிவு நீர் ஆற்றில் கலப்பதை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் 3 மாதங்களுக்கு 1 முறை தொடர்ந்து நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., அண்ணா பல்கலைக்கழக முதல்வர் முனைவர் சக்திநாதன், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திரு.ராமசுப்பிரமணியம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கணேஷ்குமார், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி லட்சுமி பிரியா, பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.கந்தசாமி, மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் திரு.சிவகுமார், கலால் வட்டாட்சியர் திரு.பால்த்துரை, திருநெல்வேலி மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் பொற்செல்வன், தச்சநல்லூர் உதவி ஆணையர் திருமதி.சுப்புலெட்சுமி மற்றும் வருவாய்த்துறை, ஊரகவளர்ச்சித்துறை சங்க பிரதிநிதிகள், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள், கல்லூரி, மாணவ, மாணவிகள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.